**செய்தி வெளியீடு எண்: 108** **நாள்: 08.02.2019**

**செய்தி வெளியீடு**

மாண்பமை உச்சநீதிமன்றம் பொது நல வழக்கொன்றில் (Civil Appeal No.9093 of 2013), வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவியை படிப்படியாக அறிமுகப்படுத்தும்படி இந்திய தேர்தல் ஆணையத்திற்கு 08.10.2013 ஆம் நாளன்று ஆணையிட்டது. ஆகஸ்ட் 2013லிருந்து தொடர்ச்சியாக மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்துடன் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவிகளை தேர்வு செய்யப்பட்ட தொகுதிகளில் பயன்படுத்தப்பட்டன. மே 2017இல் அரசியல் கட்சிகளுடனான கூட்டத்தில், இனிவரும் சட்டமன்ற, பாராளுமன்றத் தேர்தல்களில் 100 சதவீதம் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவி நடைமுறைப்படுத்தப்படும் என தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் அனைத்து வாக்குச் சாவடி நிலையங்களிலும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்துடன் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவியை பயன்படுத்த முடிவு செய்துள்ளது. மேலும் இது தொடர்பாக, பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துமாறு அறிவுறுத்தியுள்ளது.

எனவே, இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, அனைத்து வாக்குச்சாவடி அமைவிடங்களில் வாக்குப் பதிவு இயந்திரத்தையும், வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவியையும் இயக்குவது குறித்த விழிப்புணர்வு தொடர்பான வாகனங்களை, 09.02.2018 அன்று கொடியசைத்து துவக்கி வைக்குமாறு அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். ஒவ்வொரு வாக்குச்சாவடி அமைவிடங்களிலும் போதுமான அளவு நேரம் ஒதுக்கி பொதுமக்களுக்கு செயல்முறை செய்து காண்பிக்க குறைந்தபட்சம் ஆறு அல்லது ஏழு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**